ஆதங்கம்

மாலை மங்கிக் கொண்டிருந்தது. வீட் டிலே தனித்திருந்த ராஜேஸ்வரி அடிக்கடி பட லையை எட்டிப் பார்த்துக் கொள்கிறாள். தோட் டத்திற்குப் போய் விட்ட கணவன் கந்தசாமி யினதும் வைத்தியசாலையில் அவசர சத்திர சிகிச்சை இருக்கின்றதெனக் கூறி அரை வயிறு சாப்பாட்டோடு எழுந்து சென்று விட்ட மகன் சுகுமாருடையதும் டியூஷன் வகுப்பிற்கு கிளம்பி விட்ட மகள் மிதுனாவினதும் வருகைக்காக அவள் காத்துக் கொண்டுருக்கிறாள்.

நேரம் நகருவது போலத் தெரியவில்லை. குடிசைக்குள் இருக்கப் பிடிக்காமல் முற்றத் திற்கு வருகிறாள். அத்திவாரத்திலிருந்து மெல்ல மெல்ல மேலெழுந்து முற்றுப் பெற்று அடுத்த வாரம் குடி புகுவதற்கு நிச்சயிக்கப் பட்டுள்ள 'எங்கடை வீடு' என்று அவள் அடிக்கடி பெருமையோடு சொல்லிக் கொள்ளும் அந்தக் கல் வீட்டை வாஞ்ஞையோடு பார்த்துக் கொண்டு நிற்கிறாள்.

"என்னம்மா வீட்டைப் பார்த்துத் தனியச் சிரிச் சுக்கொண்டு நிக்கிறியள். யாராவது பார்த்தா விசரெண்டு நினைக்கப் போகினம்." வழமை யான குறும்புடன் உள்ளே வந்த மிதுனாவின் சத்தத்தினால் சுயநினைவுக்கு வந்தவளாய்

"வா பிள்ளை எல்லாரும் விட்டிட்டு ஒவ்வொரு திக்காய் போயிடுவியள். இனி ஒவ்வொருத்தரா வந்து சேருமட்டும் பொழுது போகவேணுமே. அதுதான் என்னோடையே இருக்கிற என்ரை பிள்ளையைப் பார்த்துக்கொண்டு நிண்ட னான். சரி...சரி...போய் முகத்தை காலைக் கழுவிக் கொண்டு வா. வந்து சாப்பிட்டிட்டுப் படி. சோதினையும் கிட்ட வந்திட்டுது...

அவள் மகளுடைய ஏலெவல் சோதனையைச் சொன்னாளா அல்லது தங்கள் குடும்பத்துக்கு வரப்போகிற சோதனையைச் சொன்னாளா தெரியவில்லை.

சிறிது நேரத்தில் சுகுமாரும் ஆஸ்பத்திரி யிலிருந்து திரும்பி வந்தான். நாள் முழுதும் தோட்டத்தில் உழைத்து விட்டுக் கணவனும் திரும்பியதும் அவர்கள் தங்கள் சாப்பாட்டு க்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார்கள்.

"அண்ணா கெதியா வந்து முதலிலை நீ சாப்பிடு. எங்கடை அம்மாவின்ரை சாப்பாட்டை யாராவது ஒராள் taste பண்ணின பிறகு தான் நான் சாப்பிடுவன். அது தான் என்ரை உயிருக்குப் பாதுகாப்பு"

கேலியும் கிண்டலுமாய் சாப்பாட்டை ஆரம் பிப்பதற்குள்ளாய் சிங்கள அரசின் 'இரும்புக் கழுகு' வானத்தில் வட்டமிடத் தொடங்கி விட்டது.

இரண்டு முட்டைகளைப் போட்டு விட்டுத் தான் வந்த காரியத்தைச் செவ்வனே செய்து விட்ட திருப்தியுடன் விமானம் திரும்பிப் போய் விட்டது. அந்தக் குண்டுகள் பலியெடுத்த பத்துப் 'பயங்கரவாதிகளில்' குடும்பத்திற்காய் உழைப்பதைத் தவிர வேறொன்றையும் அறிந்திராத கந்தசாமியும் சுகுமாரும் இருவர்.

இந்த அதிர்ச்சிச் செய்தியைக் கேட்டதிலி ருந்து தாயும் மகளும் அழக் கூட மறந்து அப்படியே விறைத்துப் போய் விட்டார்கள். இயற்கையிலேயே மென்மையான சுபாவங் கொண்ட மிதுனாவினால் ஒன்றின் மேல் ஒன் றாக விழுந்த இந்த இடிகளைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எப்போதும் சிரிப்பும் குறும்புமாக இருக்கும் அவள் இப்போது வாயைத் திறந்து பேசுவதே அபூர்வம். எப் போதும் எங்கேயோ வெறித்தபடி சிந்தனையில் ஆழ்ந்திருப்பாள்.

ராஜேஸ்வரியாலும் இந்தத் துயரங்களைத் தாங்கிக் கொள்ள முடியாவிட்டாலும் மகளி னுடைய நிலமை அவளுக்கு நன்றாகவே விளங்கியது. எனவே தனக்கு இப்போதிருக்கக் கூடிய ஒரே உறவான மிதுனாவைக் காப்பாற் றிக் கொள்வதற்காக அவள் தன் மனதைக் கல்லாக்கிக் கொள்கிறாள். இந்தச் சம்பவங் களை மிதுனா மறக்க வேண்டுமானால் அவ ளுக்கு யுத்தமற்ற புதிய சூழலொன்று தேவை என்பது ராஜேஸ்வரிக்கு நன்றாகவே விளங் கியது. எனினும் அவள் தன்னந்தனியனாய் ஒரு பெண் பிள்ளையோடு எங்கே போவாள்? இருந்தாலும் எப்படியாவது சமாளித்துத் தானே ஆக வேண்டும்.

சிறுகதை

எழுதியவர்: **சுநயனன்**

எங்கே போவது என்று யோசித்த போது நீர்கொழும்பிலே இருக்கின்ற சுகுமாரின் நண்பனான டாக்டர் ரவியின் ஞாபகம் வந்தது. ஊரிலே இருந்த ஒரேயொரு சொத்தான பிறந்த நாள் முதல் ஓடியாடி விளையாடிய காணியை விற்று அந்தப் பணத்தை மட்டுமே நம்பிக் கொண்டு மகளுடன் அந்த நீண்ட பயணத்தைத் தொடங்குகிறாள்.

புதிய பிரதேசம், புரியாத மொழி பேசும் மக்கள் எனப் புதிதான ஒரு சூழ்நிலையில் தாயும் மகளும் வந்திறங்கி விட்டனர். பஸ் நிலையத்திலிருந்து டாக்டர் ரவியின் வீட்டிற்குச் செல்வதற்கு ஆட்டோ ஒன்றைப் பிடிப்பதற்கும் பாஷை தெரிய வேண்டுமே.

இவர்களுடைய நெற்றியிலிருந்த திலகங் களைக் கொண்டும் முகங்களிலே தெரிந்த பதட்டத்தைக் கொண்டும் இவர்கள் ஊருக்குப் புதிதான தமிழர்கள் என்பதைப் புரிந்து கொண்ட தமிழ் தெரிந்த ஆட்டோ சாரதியொருவன் மெல்லப் பேச்சுக் கொடுத்தான்.

"அம்மா.எங்கை போவணும்" தயங்கித் தய ங்கி தான் கொண்டு வந்த விலாசத்தை அவனி டம் நீட்டுகிறாள் ராஜேஸ்வரி.

"ஆங்...மிச்சங் கிட்டத்திலை தான் இருக் கிறது. ஆட்டோலை ஏறுங்க நான் கொண்டு போய் விடுறது.? வேறு வழியின்றி அந்த ஆட் டோவில் ஏறிக் கொள்கின்றனர். சிறிது நேர ஓட்டத்தின் பின்னர் ஆட்டோ குறித்த முகவரிக் குரிய வீட்டின் முன்னால் போய் நிற்கின்றது. வீட்டைப் பார்த்தும் ஆட்டோ சாரதி சற்று யோசித்தவாறே.

"இதிலை தமிழ் தொஸ்தர் இல்லியே, சந்தி யிலை கடை போட்டிருக்கிற நம்ம ஆள் தான் இருக்கிறது. எதுக்கும் போய் விசாரிச்சுப் பாருங்க. அது மட்டும் நான் இங்கனை நிக்கிறது."

உள்ளே போய் மெதுவாக அழைப்பு மணியை அழுத்துகிறார்கள். உள்ளேயிருந்து வேலைக் காரப் பெண் எட்டிப் பார்க்கிறாள். அவள் ஒரு தமிழ்ப் பெண்ணாக இருந்தது வசதியாகப் போய் விட்டது. டாக்டர் ரவியைப் பற்றி அவளிடம் விசாரிக்கின்றனர்.

"அவங்க ஆறு மாசத்துக்கு முந்தியே குடும் பத்தோட வெளிநாட்டுக்குப் போயிட்டாங்க. அவங்க கிட்டை இருந்தது தான் எங்கடை தொரை விட்டை விலைக்கு வாங்கினார்"

அலை கடலில் தத்தளிக்கும் போது பிடித்துக் கொள்வதற்கு இருந்த ஒரே பிடியும் விலகிப் போய் விட்ட உணர்வு ஏற்பட்டது.

இனி எங்கே போவது? இன்றிரவு எங்கே தங்குவது என்று தெரியவில்லை. ஆண்டவனே எங்களுக்கு உதவி செய்ய மாட்டாயா என்று இருவர் மனங்களும் அங்கலாய்கின்றது. மெல்ல மெல்ல வீதிக்கு வருகின்றனர். அங்கே அந்த ஆட்டோர் சாரதி காத்துக் கொண்டிருக்கிறான்.

"என்னம்மா அவங்கடை புது வீலாசம் கிடைச்சுதா" என்ற சாரதியின் கேள்விக்கு அவர் வெளிநாடு போய்விட்ட விபரத்தைச் சொல்கிறாள்.

"உங்களுக்குத் தெரிஞ்ச வேற அட்றஸ் இருந்தா சொல்லுங்க நான் கொண்டு போய் விடுறது." அவர்கள் எந்த விலாசத் தைச் சொல்லுவார்கள். அவர்களின் முகத்திலே தெளிவாகத் தெரிந்த பதட்டத்தைக் கொண்டு சாரதியால் அவர்களுடைய நிலமையை ஊகிக்க முடிகிறது.

"உங்களுக்கு இஸ்டமெண்டா இண்டைக்கு நம்ம வீட்டிலை தங்க ஏலும். பிறகு பாத்துச் செய்வம்."

அவன் யாரோ எவனோ எப்படிப்பட்டவனோ என்பது அவர்களுக்குத் தெரியாது. என்றாலும் வேறு வழி? இருட்டவும் தொடங்கி விட்டது. பாரம் முழுவதையும் கடவுளின் மேல் போட்டு விட்டு சரி என்பதற்கு அடையாளமாகத் ஆட்டோவில் ஏறிக் கொள்கின்றனர்.

ஆட்டோ கால் மணி நேரமாக ஓடிக் கொண் டிருக்கிறது. பரட்டைத் தலைச் சிறுவர்கள், குடிபோதையில் நடமாடும் மனிதர்கள், வசை மொழிகளைப் பேசிக் கொள்ளும் பெண்கள் என ஒரு சேரிக்குள்ளாக ஆட்டோ செல்லச் செல்ல இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கின்றனர். அந்த சேரியினைத் தாண்டி இப்போது சன சந்தடி அதிகமில்லாத சந்து பொந்துகள் நிறைந்த பாதைக்குள்ளாக ஆட்டோ செல்லச் செல்ல இருவர் மனதிலும் பயம் முழுமையாகக் குடிகொள்ளத் தொடங் கியது. வேண்டாத தெய்வங்கள் இல்லை. மெது வாக ஆட்டோவை நிற்பாட்டச் சொல்வி இறங்கி விடுவோமா என்று கூட யோசித்தனர். மிதுனா விடமிருந்து பயத்தின் காரணமாக அழுகை வெடித்து விடுவதற்குத் தயாராகிக் கொண்டி ருந்த போது ஆட்டோ ஒரு குலுக்கலோடு ஒரு சிறிய குடிசையின் முன்னால் போய் நிற்கின்றது.

"இதுதான் நம்ம வீடு, இறங்குங்கம்மா" என்று சொன்னவாறே அவன் முன்னாலே நடத்துசெல்ல தயங்கித் தயங்கியே அவனுக்குப் பின்னால் பிரயாணப் பைகளையும் தூக்கிக் கொண்டு இருவரும் செல்கின்றனர்.

"மாலினி...மே எண்ட.."சிங்களத்தில் மனைவியைக் கூப்பிட்டவாறே இவர்கள் பக்கம் திரும்பி

"பயப்பட வேண்டாம், சம்சாரம் நம்மளை விட நல்லாத் தமிழ் பேசும்" என்கிறான்.

வீட்டின் உள்ளேயிருந்து எட்டிப் பார்த்த மனைவியிடம் அவன் ஏதோ சொல்ல அவள் இவர்களைப் பார்த்து ஒரு சினேகமான புன்ன கையை உதிர்த்தவாறே

"உங்களுக்கு வாங்க"

என்று அன்பாக வரவேற்கிறாள். இந்த மனப் பூர்வமான வரவேற்பில் அவர்கள் மனதில் இருந்த அச்ச உணர்வு பெருமளவு குறைந் திருந்தது.

"உக்கார வைக்கிறதுக்கு நல்ல புட்டுவமும் இல்ல. வாங்க இப்படி உக்காருங்க" பின்னல் அறுந்த காரணத்தால் அதன் மேல் பலகையிடப் பட்டிருந்த கதிரைகளைக் காட்டுகிறான்.

நீண்ட பயணத்தின் காரணமாக ஏற்பட்ட களைப்பினால் அவர்களுக்கும் உட்கார வேண்டும் போல இருந்தது. அவன் காட்டிய கதிரைகளில் அமர்ந்து கொள்கின்றனர்.

சிறிது நேரத்தில் மாலினி தேனீர்க் கோப்பைகளுடன் அங்கே வந்தாள்.

"உங்களுக்கு நல்லா சிரமம் தாறம்"என்று சொன்ன ராஜேஸ்வரியை இடைமறித்து

"இதிலயென்ன சிரமம்? கஸ்டப்படுகிற மனிச ருக்கு மற்ற மனிசர் செய்ய வேண்டிய உதவி தானே" என்று சொன்னபடி கோப்பைகளை அவர்களுக்குப் பரிமாறுகிறாள் மாலினி. வீட்டிலே வறுமை தாண்டவமாடிய போதிலும் அவர்களிடம் மனிதாபிமானமும் பண்பும் நிறையவே இருந்தது.

ஒருவாறு இரவுச் சாப்பாடும் முடிந்து விட்டது. அவர்கள் படுப்பதற்கு குடிசையிலிருந்த ஒரே அறையை ஒதுக்கிக் கொடுத்து விட்டு கணவனும் மனைவியும் வெளித் திண்ணையிலே படுத்துக் கொள்கின்றனர்.

"அக்கா எழும்புங்க"

என்ற மாலினியின் குரலினால் விடிந்து விட்டதை உணர்ந்து இருவரும் எழுந்து கொள்கின்றனர். குளித்து தேநீரை அருந்தி முடித்த பின்னர் அவர்களுடைய அடுத்த கட்டத் திட்டத்தைப் பற்றி அவர்களிடம் வினவுகி றான். அவர்களுடைய யாருமற்ற நிர்க்கதியான நிலையை நன்கு உணர்ந்து கொண்டதனால் அவனே தீர்வினையும் கூறுகின்றான்.

"உங்களுக்கு நான் வீடொண்ணு எடுத்துத் தாறன். பக்கத்துக் கொலனியில குறைஞ்ச வாடகையில லேசா வீடு எடுத்திடலாம். ஆனா இது தனி சிங்கள இடம். ஆக்களும் அவ்வளவு சரியில்ல. புலி எண்டு சொல்லி கரைச்சல் தருவானுங்க. வயசுக்கு வந்த பொம்பிளைப் புள்ளையோட தனியா இருக்க ஏலாது. டவுனில நமக்குத் தெரிஞ்ச தமிழ் முதலாளிடை வீடு வாடைக்கு குடுக்க இருக்கிறாங்க. அதை நான் பேசி எடுத்துத் தாறன் ஒண்ணுக்கும் பயப்பட வேணாம்....."

அவன் பேசிக் கொண்டு போகப் போக அத்தகைய நல்ல மனங்கொண்ட ஒருவனை அநியாயமாகச் சந்தேகப்பட்டு விட்டதற்காக அவர்கள் வருத்தப்பட்டார்கள். அது மட்டுமன்றி நாட்டின் மூலையிலே ஒரு ஓலைக்குடிசையிலே இருக்கும் இந்த ஏழை மக்களின் மனங்களிலே இருக்கின்ற புரிந்துணர்வும் நல்லெண்ணமும் இனக்குரோதத்தை வளர்க்கும் நாடாளும் அரசி யல்வாதிகளிடமும் மதத்தைப் போதிப்பதை விட்டுவிட்டு குட்டையைக் குளப்பிக் கொண்டி ருக்கும் மதகுருமாரிடமும் ஏற்படாதா என்ற ஆதங்கமும் ஏற்பட்டது.

NAG & Co.
SOLICITORS

Tel: 020 7737 1211 | Fax: 020 7731 1431
Unit 3 Holles House, Overton Road, Myattsfield Road South, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line

- ✓ CRIME
- ✓ CONVEYANCING
- ✓ MATRIMONIAL
- ✓ IMMIGRATION
- ✓ TRAFFIC MATTERS
- ✓ LANDLORD & TENANTS
- ✓ POLICE STATION MATTERS
- ✓ EMPLOYMENT MATTERS
- ✓ WORK PERMITS